(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை.

THIRU M. KANDASWAMY : Mr. Speaker, Sir, I rise to present the Fourth Report (Fourth Assembly) of the Committee on Subordinate Legislation for the year 1968–69.

(ஈ) டாக்டர் எச். வி. ஹாண்டே, மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : தலைவர் அவர்களே, அவையுரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்—

(i) பேரவைத் தலைவர் மீது டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் நேரடியாகக் குற்றஞ்சாட்டியது பற்றிய வழக்கு.

(ii) மாண்புமிகு அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை எழுப்பும்போது மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் அவர்கள் தவறாகக் கூறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது குறித்த வழக்கு.

(உ) திரு. டி. மார்டின், "கடிதம்" நாளிதழ் ஆசிரியர், வெளியிடுவோர், திரு. ஏ. பாலசுப்ரமணியம் ஆகியவர் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கைகள்

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : தலைவரவர்களே, அவையுரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :—

(i) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்ட்டின், மாண்புமிகு பேரவைத் தலைவர் தவறான, உண்மைக்குப் புறம்பான அறிக்கையை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டியதைப் பற்றிய வழக்கு.

(ii) 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் தேதிய "கடிதம்" நாளிதழில் கண்டுள்ள சில பகுதிகள் சம்பந்தமாக அவ்விதழின் ஆசிரியர், வெளியிடுபவர் மீது கொண்டுவரப்பட்ட வழக்கு.

(iii) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம், மற்றும் சில உறுப்பினர்கள் மீதான வழக்கு.

" இன்று சட்டப் பேரவையின் முன் அளிக்கப்பட்ட மேற்படி குழுவின் அறிக்கைகள் சட்டப்பேரவையின் 191 (b) விதியின் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு குழுவின் அறிக்கைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : "அவையுரிமைக் குழுவின் மேற்சொல்லப்பட்ட அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளைச் சட்டப் பேரவையின் 191 (b) விதியின் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(6) அறிவிப்புகள்

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1969–70-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. ஆ. கு. சுப்பையா.
2. ,, வி. கே. கோதண்டராமன்.
3. ,, க. ர. நல்லசிவன்.

4. திரு. பி. வேலுசாமி.
5. ,, கே. போஜன்.
6. ,, என். எஸ். வி. சித்தன்.
7. ,, ஆர். கருப்பையா.
8. ,, எஸ். முருகையன்.
9. ,, மு. கிருஷ்ணமூர்த்தி.
10. ,, ஈ. ஆர். கிருஷ்ணன்.
11. ,, சி. கே. சின்னராஜி.
12. ,, கு. கிருஷ்ணமூர்த்தி.
13. ,, ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
14. ,, எம். எஸ். மணி.
15. ,, இரா. மாணிக்கவாசகம்.
16. ,, து. ப. அழகமுத்து.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969–70-ம் ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு, மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும் சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1969–70-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் ஆவன :—

1. திரு. என். சங்கரய்யா.
2. ,, எம். சுரேந்திரன்.
3. ,, சா. மெய்யப்பன்.
4. ,, ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
5. ,, பி. ஜி. கருத்திருமன்.
6. ,, நா. காசிராமன்.
7. ,, இல. பலராமன்.
8. ,, து. ப. அழகமுத்து.
9. ,, வி. எஸ். கோவிந்தராசன்.
10. ,, ஆர். நாகசுந்தரம்.
11. ,, பி. துரைராஜ்.
12. ,, ஏ. கோ. பாலகிருஷ்ணன்.
13. ,, எஸ். ஆறுமுகம்.
14. ,, கொளத்தூர் கோதண்டம்.
15. ,, மு. ச. சிவசாமி.
16. ,, ஹாஜி ம. மு. பீர் முஹம்மது.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1969–70-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் அவர்களுடைய அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.